Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 தை (22 - 01 - 1991) செவ்வாய்க்கிழமை ஓசை: 338

## மாவீரர் தின போட்டி முடிவுகள்

(நமது நிருபர்)

தமிழீழ மாவீரர் நாளினை ஒட்டி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடாத்திய கலை, கலாசாரப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றிற்கான பரிசில்கள் வெகு விரைவில் வழங்கப்படும்; வழங்கப்படும் பரிசில்கள் பெறுமதி மிக்கவையாகவும், பெறுமதி மிக்க சரங்களாலேயே இப் பரிசில்கள் வழங்கப்படுமென்றும் கலை, கலாசாரப் பிரிவுப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார். இப் போட்டிகளில் பங்கு பற்றி முதல் மூன்று இடங்களை யும் பெற்றுக் கொண்டவர்களின் பெயர் விபரங்கள் இங்கு பிரசுரமாகின்றன; ஓவியம்:- (கீழ்ப் பிரிவு) த. கமலநாதன் நல்லூர் வடக்கு, நிசங்கள் ஆவகலாலா யா/இந்துக் கல்லூரி, நி. ஆனந்த சௌரி நல் (4 ஆம் பக்கம் பார்க்க)

### சிறிலங்கா அரசாங்கம் தொடுத்துள்ள

# தமிழர்மீதானஉளவியல்

# போரை முறியடிப்போம்

## விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அறிக்கை

(நமது நிருபர்)

விடுதலைப் போராட்டம் பெருவளர்ச்சி அடைந்துள்ள இன்றைய நிலையில் மக்கள் எமது இயக்கத்திற்கு வழங்கிவரும் ஆதரவை வீழ்த்துவதற்காக எதிரி தொடுக்கும் ஓர் உளவியல் ரீதியான போர் உபாயம் தான் இன்று நிகழ்ந்து கொண்டிருக்கும் விமானக் குண்டுவீச்சு என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயலகம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி விடுத்த அறிக்கையின் முழுவிபரம் வருமாறு;

எமது விடுதலைப்போராட்டம் பெரிய வளர்ச்சி அடைந்துள்ள இன்றைய நிலையில் எதிரி எம்மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு பல வழிமுறைகளை மேற்கொள்கின்றான்.

அதில் ஒன்றுதான் தற்போது நடைபெறும் குண்டு வீச்சுக்கள். ஆயுதப்போராட்டத்தில் முழு நம்பிக்கை வைத்து எமது இயக்கத்திற்கு முழு உற்சாகம் தந்து கொண்டிருக்கும் எமது மக்களின் (4ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில்பரவலானகுண்டுவீச்சு வல்வெட்டித்துறையில் கடும் தாக்கு

## குடும்பப் பெண் சித்திரவதை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் குடும்பப்பெண் ஒருவரை இராணுவத்தினர் கைது

## வளைகுடா நிலைமை

★ ஈராக்மீது முதல் தடவையாக செங்கடலில் உள்ள நீர்மூழ்கிக் கப்பலில் இருந்துதான் ஏவுகணைத் தாக்குதல் அமெரிக்க கடற்படை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

தொலைவில் இருந்து இயங்கும் ஏவுகணையை ஈராக்மீது செலுத்தியதாகக் கூறப்படுகிறது.

★ வளைகுடாப்போர் ஒரு சில வாரங்களில் முடிந்துவிடலாம் என பிரித்தானிய பிரதம மந்திரி ஜோன்மேஜர் தெரிவித்துள்ளார்.

★ ஈராக்கால் திருப்பித் தாக்கப்படலாம் என துருக்கிய மக்கள் அச்சம் அடைந்துள்ளனர்;

★ அமெரிக்காவில் கெனடிய விமானங்களும் போருக்குச் செல்கின்றன.

★ ஈராக் மீது இஸ்ரேல் அணுகுண்டு பிரயோகிக்காது என இஸ்ரேலுக்கான தூதுவர் அமெரிக்காவில் தெரிவித்தார்.

★ ஈராக்கின் குடியிருப்பு இலக்குகள்மீது அமெரிக்க நேசதேச துருப்புகள் தாக்குதல்களை நடத்தியுள்ளன; ஆனால் இப்படியான தாக்குதல்களை தான் நடத்தவில்லை என்று அமெரிக்கா மறுத்துள்ளது. இத்தாக்குதலில் பல அப்பாவி மக்கள் இறந்துள்ளனர் என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

★ ஈராக் தனது 250 நவீன போர் விமானங்களை ஈரானில் மறைத்து வைத்திருப்பதாக ஜப்பான் செய்தியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்; அதேவேளை இச்செய்தியை மறுத்த ஈரான் தான் இன்னும் நடுநிலைமை வகித்து வருவதாகத் தெரிவித்துள்ளது.

★ ஈராக்கினால் கைது செய்யப்பட்ட பன்னாட்டுப்படை வீரர்கள் இருபது பேரை முக்கியமான இலக்குகளில் இறை வைத்துள்ளதாக ஈராக் அறிவித்துள்ளது; மக்கள் வாழும் குடியிருப்புக்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படுவதால் இவ்வாறு இவர்கள் இறை வைக்கப்பட்டுள்ளதாக ஈராக் அறிவித்துள்ளது.

★ ஈராக்கிய தொலைக்காட்சி நேற்றுப் பின் இரவு ஒளிபரப்பிய காட்சியில் மிகப் பரபரப்பான நிகழ்ச்சி ஒன்றில் போர்க் கைதிகளாகச் சிறைபிடிக்கப்பட்ட 7 கைதிகளுடன் நடத்திய பேட்டி ஒன்றைத் திரையிட்டுக் காட்டியபோது வளைகுடாப் போரில் தாங்கள் ஈடுபட்டதற்காக இந்த விமானிகள் கவலை தெரிவித்தனர்.

★ ஈராக்கிற்கு எதிராக அணு ஆயுதங்களைப் பாவிக்கும் வாய்ப்பே இல்லை என்று இஸ்ரேல் நேற்று அறிவித்துள்ளது; ஆனால் பாக்தாத்துக்கு எதிரான போரில் இறங்குவதற்கு

# குடாநாட்டில் பரவலான குண்டுவீச்சு வல்வெட்டித்துறையில் கடும் தாக்கு

## ஒருவர் பலி; பலர் காயம்; சொத்துக்கள் நாசம்

(யாழ்ப்பாணம்)

ஊரடங்கு அமுலுடன் இடைவிடாத விமானக்குண்டு வீச்சும் ஹெலிக்கொப்டர் தாக்குதலும் நேற்று யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் இடம்பெற்றது. ஏராளமான பொதுமக்கள் படுகாயமடைந்தனர். பெருந்தொகையான சொத்துடைமைகள் நாசமாகிப் போயுள்ளன. காலை ஆறுமணியளவிலேயே இந்த விமான அனர்த்தங்கள் ஆரம்பமாகி விட்டன. வல்வெட்டித்துறைப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## நள்ளிரவில் குண்டுவீச்சு நால்வர் படுகாயம்

நேற்றுமுன்தினம் இரவு பதினொன்று முப்பது மணியளவில் நீர்வேலியில் அவ்ரோ விமானம் குண்டுவீச்சு தாக்குதல் மேற்கொண்டதில் நால்வர் படுகாயமடைந்தனர். ஒரு வீடு பலத்த சேதத்திற்குள்ளாகியது.

இத்தாக்குதலில் எஸ். செல்லம்மா (வயது 40) எஸ். ஜெய

(4ஆம் பக்கம் பார்க்க)

## இறந்த இடத்திலேயே புதைக்கப்பட்ட சடலங்கள்

யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தொடர்ச்சியான குண்டு வீச்சைத் தொடர்ந்து மக்கள் பெருந்தொகையில் தமது இடங்களை விட்டு வெளியேறினர். அவர்கள் அவசர அவசரமாக வெளியேறிக் கொண்டிருக்கையில் குண்டுவீச்சால் இறந்த உறவினர் சடலங்களை அவ்விடங்களிலேயே புதைத்து விட்டுச் சென்றதாகத் தெரிய வருகின்றது.

## "அப்பாவிமக்களின் அவலங்கள் குறித்து ஆழ்ந்த கவலை"

### -பிரேமதாஸா

(கொழும்பு)

வளைகுடாவில் யுத்தம் தீவிரமடைந்து வருவதைத்தொடர்ந்தும், அப்பாவிப் பொதுமக்களின் அவலங்களையும், உயிரிழப்புக்களையும் முன்னிட்டும் ஆழ்ந்த கவலை கொண்டுள்ள சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா அணிசேரா நாடு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மருந்துபற்றாக்குறைபற்றி அடிக்கடி அரசாங்க அதிபரிடம் கூறியுள்ளேன்

### -பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

"யாழ் மாவட்டத்தின் மருந்துப் பொருள்களின் தேவை மற்றும் பற்றாக்குறை பற்றியும் அவ்வப்போது சேகைத்தில் நடைபெற்ற கூட்டங்களிலும் பலமுறை தனியாக சந்தித்தும் அரச அதிபரிடம் எடுத்துக் கூறியிருக்கின்றேன்"

இவ்வாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திரு. கனகசபை தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தின் மருந்துத் தட்டுப்பாடு பற்றி எனக்கு அறிவித்திருந்தால்

(4ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பப் பெண் சித்திரவதை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் குடும்பப்பெண் ஒருவரை இராணுவத்தினர் கைது செய்து சித்திரவதைக்குள்ளாக்கியுள்ளனர்.

நேற்று முன்தினம் கொக்கட்டிச்சோலை, வெல்லாவெளி ஆகிய முகாம்களில் இருந்து தேடுதல் வேட்டைக்காக வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் அம்பிளாந்துறையைச் சேர்ந்த திருமதி சின்னத்தம்பி பூவனம் (வயது 40) என்ற குடும்பப் பெண்மணியைக் கைது செய்து பலமாகத் தாக்கி சித்திரவதைக்குள்ளாக்கியுள்ளனர். கடுமையாகத் தாக்கப்பட்டதால் நடக்க முடியாத நிலையில் இருந்த இவரை இராணுவத்தினர் கைவிட்டுச் சென்றனர்.

(க)

## முல்லை மாவட்டத்திலும் சில இடங்களில் குண்டுவீச்சு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மல்லாவி, துணுக்காய் ஆகிய பகுதிகளில் சிறிலங்கா விமானப் படையின் குண்டுத் தாக்குதலினால் பொதுமக்களின் குடியிருப்புகள், வர்த்தக நிலையங்கள், வைத்திய விடுதி உட்பட பல கட்டடங்கள் பலத்த சேதமடைந்தன.

நேற்றுமுன்தினம் காலை 7-00 மணிமுதல் 6-45 மணிவரை இப் பகுதியில் வட்டமிட்ட சிறிலங்கா விமானப்படையின் மூன்று பொம்மர்கள், மூன்று அவ்ரோ மற்றும் வை-12 ரக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நச்சுவாயு முகமூடியுடன் மகப்பேறு

(டெல்அவிவ்)

இஸ்ரேலில் நச்சுவாயு முகமூடி அணிந்தவண்ணம் இஸ்ரேலியத் தாய் ஒருவர் குழந்தை ஒன்றை பிரசவித்தார்.

குழந்தை ஆரோக்கியமாக இருந்ததாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர். இஸ்ரேலில் இப்படி நடந்தது இதுவே முதல் தடவையாகும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

பரப்பிய காட்சியில் மிகப் பரபரப்பான நிகழ்ச்சி ஒன்றில் போர்க் கைதிகளாகச் சிறைபிடிக்கப்பட்ட 7 கைதிகளுடன் நடத்திய பேட்டி ஒன்றைத் திரையிட்டுக் காட்டியபோது வளைகுடாப் போரில் தாங்கள் ஈடுபட்டதற்காக இந்த விமானிகள் கவலை தெரிவித்தனர்.

★ ஈராக்கிற்கு எதிராக அணு ஆயுதங்களைப் பாவிக்கும் வாய்ப்பே இல்லை என்று இஸ்ரேல் நேற்று அறிவித்துள்ளது. ஆனால் பாக்தாதுக்கு எதிரான போரில் இறங்குவதற்கு வாய்ப்புகள் உள்ளன என்று அமெரிக்காவுக்கான இஸ்ரேலிய தூதுவர் கூறியுள்ளார்.

★ வளைகுடாவில் அமெரிக்காவின் நேசதேசத் துருப்புகள் குவைத்தின் சவுதி எல்லைக்கு அருகாமையில் குவிக்கப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன. ஈராக்குடன் தரை மார்க்கமாகச் சண்டையிடுவது தவிர்க்க முடியாதது என்றும் அமெரிக்க தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

★ பதினைந்து நேசதேச நாட்டு விமானங்களை இழந்துள்ளதாக அமெரிக்கா கூறுகின்றது. ஆனால் 162 பன்னாட்டு விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாக ஈராக் அறிவித்துள்ளது.

★ அமெரிக்கா தமது தரப்பில் 22 விமானிகள் காணாமற் போய்விட்டார்கள் என்று அறிவித்துள்ளது. விமானிகளைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு பெரும் சன்மானம் கொடுப்பதற்கு ஈராக் முன்வந்திருக்கிறது.

★ அதிர்ச்சி தரக்கூடிய பெரும் ஆச்சரியம் ஒன்றுக்கு மேலை நாடுகள் தம்மைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும் என்று பாக்தாத் அறிவித்துள்ளது. ஈராக்கைப் பொறுத்த வரையில் உண்மையான சண்டை இன்னும் ஆரம்பிக்கவில்லை என்றும் பாக்தாத் வானொலி அறிவித்துள்ளது.

★ பாகிஸ்தானிய பிரதம மந்திரி நவாஸ் சரிவ் அமைதி காணும் முயற்சியில் ஈராக், துருக்கி, எகிப்து, சிரியா ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வதற்காக இன்று புறப்பட்டுச் செல்கிறார். ஈராக்கின் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்துமானால் தனது நாடு முஸ்லிம் நாடுகளின் தரப்பில் அவற்றுக்கு ஆதரவாகவே செயற்படும் என்று பாகிஸ்தானிய அதிபர் குலாம் இஸாக்கான் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

★ பிரான்ஸ் 12 ஈராக்கிய இராஜதந்திரிகளையும் அவர்களது குடும்பங்களைச் சேர்ந்த 43 பேரையும் நாட்டை விட்டு வெளியேற்றியுள்ளது. ஈராக்கிய தூதுவரையும், மற்றும் தூதரக அதிகாரிகள் ஐந்து பேரையும் மாத்திரம் பிரான்ஸில் இருக்க அனுமதித்துள்ளது.

★ நெதர்லாந்து அரசாங்கம் 24 மணிநேரத்துக்குள் ஐந்து ஈராக்கிய இராஜதந்திரிகளை நாட்டை விட்டு வெறியேறும்படி உத்தரவிட்டுள்ளது.

★ விமானத் தாக்குதல்களின் போது குடியிருப்பு மனைகளையும் பன்னாட்டுப்படைகள் தாக்கியதாக ஈராக் குற்றம்சாட்டியுள்ளது. இஸ்லாமிய இனப்படுகொலையை அமெரிக்கா நிறுத்த வேண்டும் என்றும் ஈரான் அமெரிக்காவை எச்சரித்துள்ளது. இது தொடர்பாக இஸ்லாமிய மாநாடு ஒன்றையும் ஈரான் கூட்டவுள்ளது.

★ இந்திய வெளிவிவகார அமைச்சர் வி. சி. சுக்லா வளைகுடா பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த யூகோசெலவோக்கியா தலைநகர் பெல்கிரேட் சென்றுள்ளார்.

★ இந்தியவெளிவிவகாரப் பிரதி அமைச்சரும் சிரியா, எப்லே ஜோர்தான் அல்ஜீரியா ஆகிய நாடுகளுக்கு வளைகுடா பிரச்சினை தொடர்பாக சென்றுள்ளார்.

★ வளைகுடாப் பகுதியில் யுத்தத்தை நிறுத்துமாறு ஐ. நா. வின் பாதுகாப்புச் சபையில் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருமாறு லிபியா நாட்டின் தலைவர் கடாபி அரபு நாடுகளை வற்புறுத்திக் கேட்டுள்ளார்.

## விளம்பரம்

**மிக்வைற் திரவ சவர்க்காரம்**

வீட்டுச் சலவைக்குச் சிறந்தது. அழுக்கை அகற்றும் தனிச் சக்தி வாய்ந்தது. போத்தல் ரூ. 90/- மட்டுமே. மொத்தமாக வாங்குவோருக்கு விசேட கழிவு. இணுவில், திருநெல்வேலி, யாழ். நவீன சந்தையின்னாகோப்பி கடைகளிலும் விற்பனையாகிறது. மிக்வைற் - யாழ்ப்பாணம்.

(B-1902)

## VACANCY

Visiting Assistant Lecturer Wanted to Teach Electronics, Electros techniques & Engineering Society for E. C. E. Part I B Sc., Engineering E C E. Part II or I. I. T. Necessary. Call on 23rd Wednesday between 9 — 11 a. m.


Registrar, 40 (63) College Road, Neeraviady, Jaffna.

(R. 1045)



## பிறந்தநாள் நினைவு

தோற்றம் 22 – 01 – 1953



மறைவு 14 – 02 – 1987

### வேலுப்பிள்ளை சிவனேந்திரன் (ரஞ்சன்)

யாழ்இந்து மடி தவழ்ந்து
லண்டன் மா நகரில் உயர்
கல்வியைப் பெற்றுப் பொறியியல்
வல்லுநரான "ரஞ்சன்" ஈழத்தில்
இல்லையோ காண் தமிழர்
இதயமே இவனின் வீடு
வல்லவன்; எழுவரிற் கடைசி
வாழ்வு தமிழுக்காய் ஈந்த
வரிசையில் மூத்தோன் "சிவி"யே

(B–1904) —உறவினன்


## கொர்பி, பதவி விலக மக்கள் கோரிக்கை

(மாஸ்கோ)

சோவியத் யூனியனின் குடியரசுகளில் ஒன்றான லித்துவேனியாவில் சோவியத் அதிபர் மிக்கெயில் கொர்பச்சேவ பதவி விலக கோரிப் பெரும் ஆர்ப்பாட்டங்கள் நேற்று இடம்பெற்றன.

லித்துவேனியக் குடியரசு சுதந்திரப் பிரகடனம் செய்திருந்ததும், சோவியத் துருப்புகள் லித்துவேனியாவுக்கு அனுப்பப்பட்டிருப்பதும் தெரிந்தவையே.

## அமெரிக்காவின்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே ஈராக் இங்கு பெரும் சக்தியாக உருவெடுக்க முன்பு அதனை பலவீனப்படுத்திவிட வேண்டும் என்பதே அமெரிக்காவின் எண்ணம். அதற்கான சந்தர்ப்பத்தை அமெரிக்கா எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளை குவைத் பிரச்சினை அதற்கொரு நல்ல சாட்டாக அமைந்தது.

அமெரிக்காவுக்கும் - சோவியத் யூனியனுக்கும் இடையில் 40 வருடங்களுக்கு மேலாக நீடித்துவந்த 'கெடுபிடி யுத்தம்' (Cold war) முடிவடைந்ததைத் தொடர்ந்து அமெரிக்காவின் போக்கை சோவியத் பெரிதும் எதிர்க்கவில்லை. சோவியத் சர்வதேசச் சிக்கல்களிலிருந்து தற்போது சற்று ஒதுங்கிக் கொள்கிறது. அமெரிக்கா பொலிஸ்காரன் வேலை பார்ப்பதில் ஈடுபட்டுள்ளது.

1949 ஆம் ஆண்டு அரபு-இஸ்ரேலிய யுத்தம் இடம்பெற்றது. பின்பு 1956, 67, 73 எனப் பல யுத்தங்களும் 1980 தொடக்கம் பல தாக்குதல்களும் தொடர்ந்து அரபுக்களுக்கு எதிராக நடந்து வந்துள்ளன. ஏறக்குறைய ஒவ்வொரு பத்து வருடங்களுக்கு இடையில் அரபுலகம் தாக்குதல்களுக்கு உட்பட்டு வந்துள்ளது.

அந்த வகையில் தற்போது 1991ஆம் ஆண்டு அரபுலகத்திற்கு எதிராக அமெரிக்கா


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 25 - 12 - 1974



இறப்பு 23 - 12 - 1990

### வீரவேங்கை சுமித்திரன்

### செல்வநாதன் பெனடிற்குமார் (சண்முகம்)

எங்கிருந்தோ வந்தாய், எம் இதயம் கவர்ந்தாய்,
தந்தையை இழந்தாய், தாயையும் பிரிந்தாய்,
சிந்தை மகிழப் பல சேவைகள் செய்தாய்,
மங்காப்புகழ் எங்கும் தங்கவும் செய்தாய்.
எட்டு ஆண்டுகள் எம்முடன் வாழ்ந்தாய்,
அட்டகாசம் புரியும் அரக்கரை அழிக்க,
திட்டமிட்டு எம்மை விட்டுப்பிரிந்தாய்,
புன்னகை பூத்த பொன் மனச்செம்மலே!
உன்னையே அழித்துத்தமிழ் மண்ணைக்காக்க,
சின்னவயதில் சிறியெழுந்து, பெருந்தியாகமே
-செய்தாய்.

இவன் அன்றோ எம்மகன்!
அனைவரையும் கவர்ந்த தெய்வமகன்!

'சுவா -ஞானபதி'
உயரப்புலம்
ஆனைக்கோட்டை

உமது பிரிவால் பரிதவிக்கும்,
எட்வேட் செல்வநாதன் (ஓய்வு ஆசிரியர்)
இரேசம்மா செல்வநாதன் (ஆசிரியை)
உற்றோர், மற்றோர்.

(B/1890)



## UNIVERSITY GRANTS COMMISSION

*GELT & POP Programmes 1991 for University Entrants*

## POSTS OF PART TIME ENGLISH TEACHER

The University Crants Commission will conduct the General English Language Teaching and Practical Orientation Programmes for those who qualify to enter the Universities based on the Advanced Level exam held in 1989. It will consist of English teaching and work experience in their chosen fields and elsewhere, designed to make them more confident as they enter the University.

The English teaching in this programme will include the components of (a) the English Everyday Series, (b) An Integrated Course in English for the Advanced Level, (c) Literature / English for specific purposes.

The following categories of teachers with at least ten years experience are


நினைவு கூருகின்றோம்!

Teaching and Practical Orientation Progra[...] the Universities based on the Advanced Level exam held in 1989. It will consist of English teaching and work experience in their chosen fields and elsewhere, designed to make them more confident as they enter the University.

The English teaching in this programme will include the components of (a) the English Everyday Series, (b) An Integrated Course in English for the Advanced Level, (c) Literature / English for specific purposes.

The following categories of teachers with at least ten years experience are eligible to apply for the above posts.

1. English Medium graduates
2. English trained teachers
3. Graduates with English as a subject for the degree
4. Teachers with TESL and TEFL qualifications of any University or a Higher Institute of Education
5. Retired English Teachers with any of the above qualifications and below 65 years of age may apply.

Teachers will be expected to take classes on weekday afternoons at regionally distributed centres. The course will be for a period of about six months and may involve about 50 hours of work per month.

All teachers selected will receive their letters of appointment from the University Grants Commission, and will be paid at UGC approved rates.

Applications prepared on 12" x 8" blank paper, using specimen given below, should be sent by Registered post undersigned on or before 08th February 1991. The letters and the district preferred should be noted on the top left corner of the envelope.

Secretary.
University Grants Commission,
20, Ward Place, Colombo 07.

## APPLICATION FORM

### Post of Part Time English Teacher

1. Name :
2. Designation :
3. Age : 4. Sex :
5. Address : Home:
   Official:
6. District of residence :
7. Professional qualifications:
   (Attach photocopy of certificates)
8. Academic qualifications and subjects qualified in :
   (Attach photocopy of certificate of highest qualification)
9. Relevant experience and training (briefly) :
10. Any other special qualifications :

I affirm the truth of the above particulars.

Signature:
Date :

(B. 1886)

[...] பொரு பத்து வருடங்களுக் இடையில் அரபுலகம் தாக்குதல்களுக்கு உட்பட்டு வந்துள்ளது.

அந்த வகையில் தற்போது 1991ஆம் ஆண்டு அரபுலகத்திற்கு எதிராக அமெரிக்கா ஈடுபட்டுள்ள தாக்குதல் கடந்த காலத் தாக்குதல்களின் ஒரு தொடர்ச்சியே ஆகும். பொதுவாக அரபுலகத்தை சுய தயாரிப்பில் சுமார் 8 அல்லது 10 வருட அவகாசம் கொடுக்கப்படும். அவ்வாறு தயாரிப்பு முடிவடையும் கட்டத்தில் அல்லது ஒரு பெரிய வளர்ச்சி ஏற்படும் கட்டத்தில் ஒரு தாக்குதலை செய்து அதனை முடமாக்கி விடுவார்கள்.

அவ்வாறு அரபுலகத்தை முடமாக்கக்கூடிய ஒரு நடவடிக்கையே இன்றைய அமெரிக்க யுத்தம். அமெரிக்கா ஒரு நல்ல சாட்டை வைத்துக் கொண்டு யுத்தம் புரிகின்ற போதிலும் நீண்டகாலப் போக்கில் அமெரிக்கா இப்பிரச்சினையில் தக்க பாடம் படிக்கும். இந்த யுத்தம் பல புதிய பிரச்சினைகளை உலகரங்கில் தோற்றுவிக்கும். இந்த யுத்தம் ஒரு பிரச்சினையின் முடிவல்ல; பல புதிய பிரச்சினைகளின் தொடக்கமாக அமையும்.


**PERSONAL CLASSES**

8. M. C. முன்லேன்,
JAFFNA.

**DAY CLASS**
A/L 90 & 91
**Chemistry**

திரு. செல்வம் B. Sc. (Cey)
பிரிவு I 8-00 a.m.
பிரிவு II 9-00 a.m.
ஆரம்பமாகிவிட்டது.
(விபரங்கள் நேரில்)

(B. 1900)


## நினைவு கூருகின்றோம்!

## ஜனவரி 22

1989ஆம் ஆண்டு மட்டக்களப்பு கொக்குவிலில் ஏற்பட்ட மோதலில் வீரமரணமடைந்த

**தவராசா**

அவர்களை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

எம் இரத்தத்தில்
ஏற்றிய தீபங்களில்
எதிரியின் நிழலை
கண்டு கொள்(ல்)கிறோம்

காட்டிக் கொடுக்க
கயவர் கூட்டம்
காத்துக்கிடந்தாலும் எதிர்த்து நிற்க
மறவர் நாம்
எழுந்து வருகின்றோம்

தென்றலைத் தொடக்கூட
நாம் அஞ்சுவதன் காரணம்
நமது விடுதலைப் பாதை
புழுதி அடைந்து விடக்
கூடாது என்பதால்தான்-

**- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி**

(B-1889)

★ சிந்தனைக்கு ★

நொண்டிக் குதிரைக்கு சறுக்கியது சாட்டு.
— தமிழ்ப்பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திராவீதி யாழ்ப்பாணம். 22-01-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# பழியைப் பிறர்மேல் போடுவது அழகல்ல

"யாழ் மாவட்டத்தில் மருந்துத் தட்டுப்பாடு நிலைமை பற்றி நான் கொழும்பில் தங்கியிருந்தபோது எனக்கு அறிவித்திருந்தால் எப்படியேனும் ஒரு சிறு தொகுதி மருந்தாவது கொண்டு வந்திருக்க முடியும். ஆனால் இங்கிருந்து எனக்கு எந்தவித அறிவித்தலும் வரவில்லை" என கொழும்பு சென்று திரும்பிய யாழ் அரச அதிபர் அன்ரன் அல்பிரட் தெரிவித்துள்ளார்.

அரச அதிபரின் இந்த அறிவிப்பானது ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாக உள்ளதோடு, அரச அதிபரின் நொண்டிச் சாட்டு ஒன்றையும், யாழ் அதிகாரிகளினது அசமந்தப் போக்கையும் காட்டுவதாகவும் உள்ளது.

தமிழீழப் பிரதேசத்தில் யுத்தம் ஆரம்பமாகியதில் இருந்து உணவுப் பொருள்களும், மருந்துப்பொருள்களும் கொண்டு வருவதற்கு சிறிலங்கா அரசாங்கம் பெரும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது என்பது அரச அதிபருக்குத் தெரியாத விடயமல்ல.

அரசவைத்தியசாலைகளிலும், தனியார் மருத்துவ மனைகளிலும், தனியார் மருந்தகங்களிலும் மருந்தின்மையும், உள்ள ஒரு சில மருந்து வகைகளும் உண்மையான விலைகளைவிட மிக உயர்ந்தளவில் விற்கப்படுவதும் சாதாரண மக்களுக்கே தெரிந்த விடயமாகும்.

மேலும் அரச அதிபரே இந்த விடயங்கள் தொடர்பாக பலமுறை கொழும்புடன் தொடர்பு கொண்டும் இருந்தார். மேலும் பிரஜைகள்குழு போன்ற பல பொதுஸ்தாபனங்கள் சிறிலங்கா ஜனாதிபதி உட்பட யாழ். அரச அதிபர் வரையில் இந்தப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, நெருக்கடி பற்றி மகஜர்கள் அனுப்பியிருந்தார்கள். அத்தோடு கொழும்பில் இருந்து பருத்தித்துறைக்கு கப்பலில் கொண்டு வரப்படும் மருந்துப் பொருள்களின் அளவுகளையும் அவற்றின் பற்றாக்குறை பற்றியும் அரச அதிபர் அறியாமல் இருப்பதற்கு வாய்ப்பு

# "அமெரிக்காவின் விருப்பத்துக்குள் சிக்குண்ட ஈராக்"

அரபுலகில் நிகழும் யுத்தம் இன்று நேற்று நடைபெறும் ஒரு யுத்தமல்ல. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்பு அதிக யுத்தங்கள் நிகழ்ந்த பிராந்தியம் இஸ்லாமியர் வாழும் மேற்காசிய தான். ஏன் இப்படி யுத்தங்கள் மேற்காசியாவுக்குச் சொந்தமாயின? இன்று நடைபெறும் அமெரிக்க-ஈராக்கிய யுத்தம் அரபுலகத்திற்கும் இஸ்லாமிய நாட்டுக்கும் எதிராக நிகழ்ந்த ஏனைய யுத்தங்களின் தொடர்ச்சியேயாகும்.

1947ஆம் ஆண்டு ஐ நா சபையின் தீர்மானத்தின்படி பாலஸ்தீன பிரதேசம் இஸ்ரேல் என்றும் பாலஸ்தீனம் என்றும் இரு அரசுகளாகப் பாகப்பிரிவினை செய்யப்பட்டன. ஆனால் 1949ஆம் ஆண்டு இஸ்ரேல் ஐ நா. சபையின் தீர்மானத்தை மீறி பாலஸ்தீனத்தைக் கைப்பற்றி இஸ்ரேலுடன் இணைத்துக் கொண்டது. பாலஸ்தீனியரில் பெரும் பகுதியினர் அகதிகளாகி ஏனைய அரபு நாடுகளுக்குள் தஞ்சம் புகுந்தனர். இப்பிரச்சினை சம்பந்தமாக ஐ நா. சபையில் பாலஸ்தீனத்திற்கு எதிராகவும், இஸ்ரேலுக்கு சார்பாகவும் "வீடோ" எனப்படும் தனது ரத்து அதிகாரத்தை அமெரிக்கா தொடர்ந்து பயன்படுத்தி வந்தது.

ஐ. நா சபையின் தீர்மானத்தை மீறி ஆக்கிரமித்த இஸ்ரேலுக்கு எதிராக ஐ நா சபையோ அல்லது அமெரிக்காவோ எந்தவித இராணுவ நடவடிக்கைகளிலும் ஈடுபடாத போது ஏன் இப்போது குவைத்தை ஈராக் ஆக்கிரமித்து விட்டது என்று கூறி இராணுவ நடவடிக்கை எடுக்க முற்பட்டன. அப்படியாயின் இதில் ஏதோ ஓர் உள்நோக்கம் இருக்கின்றது.

அரசியல், பொருளாதார, இராணுவ நோக்கங்கள் இதற்குள் புதைந்து கிடக்கின்றன. குவைத்தை விடுவித்தல் என்று வெளிப்படையாகச் சொல்லிக்

ஓர் அரசாக இணையவிடாது தடுப்பதுடன் அவற்றின் பலத்தையும் வளரவிடாது தடுக்க வேண்டும்.

இதற்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று இந்த மேற்காசிய இஸ்லாமிய நாடுகளிடையே பிரிவினை உருவாக்குவது இரண்டு நேரடியாகவோ அல்லது இஸ்ரேல் மூலமோ இந்த நாடுகளுக்கு எதிராகப் போரைத் தொடுப்பது.

மேற்குலகைப் பொறுத்தவரையில் முதலாவது முறையே எப்போதும் விருப்பத்தக்கது. இதன் மூலம் பெற்றோலியப் பொருள்களை கொள்வனவு செய்யச் செலவு செய்த

டது, பாலஸ்தீனத்தை யூதர் பிடியில் இருந்து விடுவிப்பது தனது முதற்பணி என அறிவித்தது.

இந்நிலையில் அரபுலகிற்கு அல்லது இஸ்லாமிய நாட்டுக்குத் தலைமை தாங்குவது கொமெனியா அல்லது சதாம் ஹுசெயினா என்ற அதிகாரப் போட்டி எழுந்தது. இந்த தலைமைத்துவ அதிகாரப் போட்டி ஈரான் - ஈராக் யுத்தமாகப் பரிணமித்தது. இந்த யுத்தத்தை வளர்த்து இரு சக்திகளையும் அழியவிடுவதில் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் பெரிதும் அக்கறையாய் இருந்தன.

பணத்தை ஆயுதங்களை அந்த நாடுகளுக்கு விற்பதன் மூலம் மீண்டும் மேற்குலகம் பெறுறுக் கொள்ளும்.

இதனையும் மீறி அரபுலகம் வளர்ச்சி அடையும் போது தான் இரண்டாவது பலம் பிரயோகிக்கப்படும். அரபுலகத்தை அல்லது மேற்காசிய நாடுகளைக் கட்டுப்படுத்தக் கூடிய அல்லது ஒரு குடையின் கீழ் கொண்டுவரக் கூடிய ஓர் அரபு நாடு தோன்றக் கூடா

❋ சாரணன் ❋

தென்பது இதன் முதல் உள் நோக்கமாகும். 1950 களின் மத்தியில் ஜனாதிபதி நாஸர் தலைமையில் எகிப்து அரபுலகிற்குத் தலைமை தாங்கத் தொடங்கியது. நாஸரை கொல்லுவது, எகிப்தைப் பல வீனப்படுத்துவது போன்ற முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டது.

ஈராக்கிற்கு சோவியத் ஆயுத உதவி செய்து வந்தது; எனவே தொடர்ந்து யுத்தத்தை நீடிக்க வேண்டுமென்றால் ஈரானுக்கு ஆயுத உதவி தேவை. இந்தவேளை அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையில் எந்த உறவும் இல்லை. ஆயினும் ஈரான் தொடர்ந்து யுத்தத்தில் ஈடுபடுவதற்குரிய நிதி உதவியும் ஆயுத உதவியும் செய்ய வேண்டிய அவசியம் அமெரிக்காவிற்கு ஏற்பட்டது. எனவே உறவில்லாத ஈரானுக்கு நேரடியாக உதவி செய்ய அமெரிக்காவால் முடியாது. இந்த நிலையில் நிக்கரகுவாவுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்த "கொன்றா" கிளர்ச்சியாளருக்கு என றீகன் நிர்வாகம் நிதியை ஒதுக்கி அந்த நிதியை இஸ்ரேலிடம் கொடுத்து இஸ்ரேல் மூலம் ஈரானுக்கு ஆயுத விநியோகத்தை செய்தது. இந்த விவகாரம் "ஈரான்கேட்" விவ

கடந்த சனிக்கிழமை புலிகளின் குரல் வானொலியில் ஒலிபரப்பான இந்தக் கட்டுரை அப்படியே இங்கு பிரசுரமாகிறது.

பலமுறை கொழும்புடன் தொடர்பு கொண்டும் இருந்தார். மேலும் பிரஜைகள்குழு போன்ற பல பொதுஸ்தாபனங்கள் சிறிலங்கா ஜனாதிபதி உட்பட யாழ். அரச அதிபர் வரையில் இந்தப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, நெருக்கடி பற்றி மகஜர்கள் அனுப்பியிருந்தார்கள். அத்தோடு கொழும்பில் இருந்து பருத்தித்துறைக்கு கப்பலில் கொண்டு வரப்படும் மருந்துப் பொருள்களின் அளவுகளையும் அவற்றின் பற்றாக்குறை பற்றியும் அரச அதிபர் அறியாமல் இருப்பதற்கு வாய்ப்பு ஏதும் இல்லை.

அத்தோடு யாழ் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு தனியார் மருந்தகங்களுக்கு மருந்து பெறுவது தொடர்பாக வியாபாரிகளுடன் அவர்களின் தேவை பற்றியும் அரச அதிபர் உரையாடியிருந்தார். மேலும் தனியார் மருத்துவ மனைகளுக்கென கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகள் கொண்டு வர முடியாமல் கொழும்புத்துறைமுகத்தில் கிடப்பதும், அவற்றை கொண்டு வர எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிவுற்றுள்ளமையும் அரச அதிபருக்கு தெரியாமல் இருப்பதில் நியாயமில்லை.

இவற்றைவிட, யாழ்ப்பாணத்தில் இருந்து நான்கு நாளாந்தத் தினசரிகள் வெளிவருகின்றன. இந்தப் பத்திரிகைகள் யாவற்றிலும் யாழ் மாவட்ட அன்றாட நிலைவரங்களும், உணவுப் பொருள்களின்தட்டுப்பாடுகள், மருந்துப் பொருள்களின் தட்டுப்பாடுகள் பற்றி பல்வேறு செய்திகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இவற்றில் விசர்நாய்க்கடி, நீரிழிவு நோய் போன்ற நோய்களுக்கான தடுப்பூசி இன்மை, தாய் சேய் மரண வீதங்களில் திடீர் உயர்வு என்பன பற்றி அடிக்கடி செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்தச் செய்திகள் யாழ். அரச அதிபர் யாழ்ப்பாணத்தில் இல்லாத சில வாரங்களில் மட்டுமல்ல அதற்கு முன்பிருந்து சில மாதங்களாகவே வந்து கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில், அரச அதிபரின் இந்தக் கூற்றானது யாழ். மாவட்டத்தின் இன்றைய நிலையை அவர் சரிவர புரிந்து கொள்ளவில்லையோ என எண்ண வைக்கின்றது. அத்தோடு உள்ளூர் பத்திரிகைகள் மீது அவர் நம்பிக்கை வைப்பதில்லைப் போலத் தெரிகின்றது. அவ்வாறாயின் உள்ளூர் பத்திரிகைகள் மட்டுமல்ல; கொழும்பு தமிழ் பத்திரிகைகளும் யாழ்ப்பாணத்தில் இப்பொருள்களுக்கான தட்டுப்பாட்டைப் பற்றி பலமுறை செய்திகள் பிரசுரித்துள்ளமை பற்றி இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. அதேவேளை, அரச அதிபர் இவ்வாறாக தமக்கு யாழ். நிலைவரம் சரியாகத் தெரியாது போய்விட்டது எனக் கூறுவதற்குக் காரணமாக இருந்தது இங்கிருந்த அதிகாரிகளினதும் பொறுப்பற்ற செயலும் ஆகும்.

அரச அதிபர் கொழும்பில் நிற்கும்பொழுது கடமையுணர்வுள்ள அதிகாரிகள் இங்கிருந்திருப்பின் அவருடன் தொடர்புகொண்டு நெருக்கடிகளை விளக்கி அதற்குப் பரிகாரம்தேட முயற்சித்திருக்கலாம். அவர்களின் அக்கறையின்மையால், அரச அதிபர் இவ்வாறானதொரு விளக்கத்தைக் கொடுக்கும்போது அவரில் தப்பில்லை என்றதொருநிலை 'தவிர்க்கமுடியாது' ஏற்றுக்கொள்ள வேண்டி ஏற்படுகின்றது.

---

இராணுவ நடவடிக்கைகை எடுக்க முற்பட்டன. அப்படியாயின் இதில் ஏதோ ஓர் உள்நோக்கம் இருக்கின்றது.

அரசியல், பொருளாதார, இராணுவ நோக்கங்கள் இதற்குள் புதைந்து கிடக்கின்றன. குவைத்தை விடுவித்தல் என்று வெளிப்படையாகச் சொல்லிக் கொண்டாலும் இதன் உள் நோக்கம் அதுவல்ல. குவைத் என்பது ஒரு நல்ல சாட்டு மட்டுமே. உண்மையில் இது மேற்குலகின் நலனுக்கான ஒரு கபடம் நிறைந்த யுத்தமே.

அமெரிக்காவின் விருப்பப்படி பெற்றோலிய விநியோகத்தை குவைத் அதிகரித்தது. இதனால் உலக சந்தையில் பெற்றோலின் விலை வீழ்ச்சி அடைந்தது. இதனைக் கண்டு ஆத்திரமடைந்த பெற்றோலிய உற்பத்தி நாடாகிய ஈராக், குவைத்தின் மீதுபடையெடுத்து அதனைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது. ஈராக்கின் இச்செயல் அமெரிக்காவிற்கும் ஏனைய மேற்குலக நாடுகளுக்கும் ஆத்திரத்தை மூட்டியது. வேறு பல காரணங்களுக்காக ஈராக்கை தண்டிக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்த அமெரிக்காவிற்கு இது ஒரு நல்ல சாட்டாக அமைந்தது.

அதாவது அரபுலகில் அல்லது மேற்காசியாவில் ஒரு ஸ்திரநிலை ஏற்படுமேயானால் அல்லது ஓர் அரசு அங்கு சக்தியுடன் வளருமேயானால் அது மேற்குலக நலன்களுக்குப் பாதகமாய் அமைந்துவிடும் என்பது அமெரிக்காவின் எண்ணம். அப்படி ஒரு ஸ்திர நிலை தோன்றும்போது பெற்றோலியபொருள்களின் விலை விநியோகம் என்பனவற்றில் கட்டுப்பாடு நிலவும். இரண்டாவது காரணம் இந்த பெற்றோலியத்தால் வரும் வருமானத்தை வைத்துக் கொண்டு இராணுவ ரீதியில் அரபுலகம் வளர்ச்சியடையுமேயானால் அது மேற்குலகத்திற்கு ஆபத்தானதாய் அமையும். எனவே இந்த அரபு அல்லது இஸ்லாமிய நாடுகளை வலுப்படுத்துவது போன்ற முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டது.

நாஸரைக் கொலை செய்யுமாறு பீற்றர் றைட் எனப்படும் பிரித்தானிய உளவாளியை அமெரிக்கா பணித்தது. இதனை பீற்றர் றைட் 1986 ஆம் ஆண்டு வெளியிட்ட தனது 'ஸ்பைகச்சர்' (Spy-catcher) எனும் நூலில் தெரிவித்துள்ளார். 1967 ஆம் ஆண்டு நடைபெற்ற அரபு-இஸ்ரேலிய யுத்தத்தோடு எகிப்து முற்றிலும் தோற்கடிக்கப்பட்டது. அமெரிக்கா இஸ்ரேலுக்குப் பின்னால் நின்று கொண்டு எகிப்தின் முதுகெலும்பை என்றும் எழும்ப முடியாதளவிற்கு முறித்துவிட்டது. எகிப்துடன் இணைந்திருந்த அரபு நாடுகள் அனைத்தும் பெரும் தோல்வியை தழுவிக் கொண்டன. இதன் மூலம் எகிப்து தலைமையிலான அரபுலக ஐக்கியம் தோல்வி அடைந்தது. அரபுலகம் ஓர் அரசாக ஐக்கியப்படுமானால் அது அமெரிக்காவிற்கு போட்டியிட முடியாதளவிற்கு பாதகமாய் முடியும்.

எகிப்தின் முயற்சி தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து மேற்காசியாவில் இரு பெரும் இஸ்லாமிய நாடுகள் வளரத் தொடங்கின. ஒன்று ஈரான்; மற்றையது ஈராக். ஈரானிய மன்னன் ஷாவை தன்பக்கம் வைத்துக் கொண்டு அமெரிக்கா பிரச்சினைகளை சமாளித்து வந்தது. ஷா ஆட்சி தூக்கி எறியப்பட்டு கொமெனி ஆட்சிக்கு வந்ததும் ஈரானைக் கண்டு அமெரிக்கா அச்சமடைந்தது. ஈரான் இஸ்லாமியப் புரட்சி என்று கூறிக் கொண்டு அரபு நாடுகளை தன்னுடன் இணைத்து மேலைத்தேசத்திற்கு எதிராகத் தலைமை தாங்க முற்பட்ட ஈரானுக்கு ஆயுத விநியோகத்தை செய்தது. இந்த விவகாரம் ''ஈரான்கேட்'' விவகாரம் என அரசியலில் அழைக்கப்படுகிறது.

**கடந்த சனிக்கிழமை புலிகளின் குரல் வானொலியில் ஒலிபரப்பான இந்தக் கட்டுரை அப்படியே இங்கு பிரசுரமாகிறது.**

இவ்வாறு தனது நேரடி எதிரியாகிய ஈரானுக்கு ஏதோ ஒரு வகையில் ஆயுத விநியோகத்தைச் செய்து அதன்மூலம் தனது நிரந்தர எதிரியாகிய இஸ்லாமிய சக்தியை பலமிழக்கச் செய்வதில் அமெரிக்கா பெரிதும் அக்கறையாக இருந்தது.

8வருட ஈரான் - ஈராக் யுத்தம் முடிவடைந்த பின்னர் ஈரான் பெரிதும் பலவீனப்பட்டுள்ளது. ஈராக் மேற்காசியாவில் பலமுள்ள நாடாக வளர்கிறது. ஈராக் அணுசக்தியில் வளர்ச்சியடைய முற்பட்டபோது 1980 ஆம் ஆண்டு இஸ்ரேல் ஈராக்கின் அணு உலைகளை விமானக் குண்டுவீச்சின் மூலம் தாக்கி அழித்தது. இதில் இஸ்ரேலுக்கு பின்னால் அமெரிக்கா நின்று செயற்பட்டது. தற்போது பாலஸ்தீன விடுதலை இயக்கமும் PLO ஈராக்கும் தோளோடு தோள் சேர்ந்துள்ளன. அரபுலகத்திற்கு சதாம் தலைமை என்ற நிலை வளரத் தொடங்கியது. அரபுலகத்திலுள்ள பெரிய இராணுவம் சதாம் உடையதுதான். மேலும் இரசாயன ஆயுதங்களைக் கொண்ட நாடாகவும் அது உள்ளது. அத்துடன் அணு ஆயுதம் தயாரிக்கும் சக்தி ஈராக்கிடம் உண்டென்றோ அல்லது அதை நோக்கி வளர்கின்றதென்றோ கூறப்படுகின்றது. இந்த நிலையில் ஈராக் வளர்ச்சி அடைந்தால் இஸ்லாமிய உலகை கட்டுப்படுத்தக்கூடிய வல்லமை அதற்கு ஏற்படுவதுடன் மேற்குலகிற்கு எதிராக செயற்படும் என்றும் மேற்குலக இராஜதந்திரிகள் அஞ்சினர்.

([illegible]ம் பக்கம் பார்க்க)

# அத்தியாவசிய சேவைகள் சீர்செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## யாழ். அரசஅதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சில அத்தியாவசியசேவைகளை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக அண்மையில் கொழும்பு சென்று திரும்பிய யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

### உணவு விநியோகம்

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கட்டுப்பாட்டு விலையில் பாவனையாளருக்கு மா விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு கப்பல் மூலம் எடுத்துவரப்படும் மா பயன்படுத்தப்படும்.

தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இலவச உலர் உணவு விநியோகம் பூர்த்தியானதும் முன்னர் இடை நிறுத்தி வைக்கப்பட்ட இடம் பெயர்ந்தோருக்கான வருமான எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட உலர் உணவு விநியோகம் 5 ஆம் கட்டத்தில் இருந்து தொடர்ந்து நடைமுறைப் படுத்தப்படும்

மேலும் உணவு முத்திரை மூலம் 1991ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரைக்குமான பொருள்களை வழங்குவதற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுமதியும் பொருள்கள் கொள்வனவிற்கான பணமும் வழங்கப்பட்டுள்ளது.

உணவு முத்திரை மூலம் பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்கள் நெல் போன்றவற்றை கொள்வனவு செய்து விநியோகிப்பதற்குத் தீர்மானித்துள்ளன.

### மாணவர்களுக்கு

பருத்தித்துறைக்கு அடுத்து வர இருக்கும் கப்பல் மூலம் மாணவர்களுக்கான மதிய உணவு முத்திரைகள் சுமார் இரண்டு லட்சத்து இருபத்தையாயிரம் ரூபா வரையானவை

### பணம

யாழ் மாவட்டத்தில் பணப் புழக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு தற்பொழுது மாதாந்தம் எடுத்து வரப்படும் பணத்தின் தொகையை அதிகரிக்கும் படி கொழும்பில் உயர் அரச அதிகாரிகளைக் கேட்டபோது இப்பணத்தின் தொகையை 70 மில்லியனாக உயர்த்துவதற்கு கூட்டுப் படைகளின் தலைமை அலுவலக ஒப்புதல் அளித்ததாகவும் எனினும் இது குறித்து நிதி அமைச்சின் செயலகம் பதில் எதுவும் தரவில்லையாம்.

### மறுப்பு

மேலும் அரச அதிபர் அத்தியாவசிய சேவைகள் உயர் அதிகாரிகளிடம் இங்கு நிலவும் காகிதாதிகளின் தட்டுப்பாடு பற்றி தெரிவித்தபோது காகிதாதிகள் எதையும் வட பகுதிக்கு விநியோகிக்கத் தாம் அனுமதிக்கப்போவதில்லை என்று மறுப்புத் தெரிவிக்கப்பட்டதாம்,

பலநோக்குக் கூட்டுறவு

### மருந்துப்பற்றாக்குறை

கொழும்பில் இருந்து வரும் போது ஒரு பகுதி மருந்தையேனும் எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பேன் என்ற யாழ் மாவட்டத்தின் மருந்து நிலைமை பற்றி எதுவுமே தெரியாது என்ற பாணியில் அரசாங்க அதிபர் அறிவித்திருப்பது பற்றி கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கடந்த ஜூன் மாதத்தின்பின் எமக்கு நாம் கேட்கும் அளவில் மருந்துப் பொருள்கள் அனுப்பிவைக்கப்படவில்லை. இதனால் தற்போது சில தடுப்பு மருந்துகள் உட்பட பல அத்தியாவசிய மருந்துப் பொருள்களுக்கு பற்

சங்கங்களுக்குத் தேவையான எரிபொருளை அனுப்பி வைக்கும்படி அரச அதிபரால் கோரப்பட்ட போதும்திருப்திகரமான பதில் கிடைக்கவில்லையாம்.

மேலும் ஓய்வூதியக்காரர்களது தைமாதத்திற்குரிய வவுச்சர்கள் கப்பலில் எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் கட்டுநிதி முழுவதும் வந்துசேராமையினால் ஓய்வூதியம்வழங்க முடியாத நிலைதொடர்ந்தும் நிலவும் என்பதோடு, பிறப்பு, இறப்பு திருமணசான்றிதழ்களுக்குரிய படிவப் புத்தகங்கள் தாராளமாக எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது எனவும் அரச அதிபர் தெரிவித்தார். (க)

### முல்லைமாவட்டத்திலும்

விமானம், சீபிளேன், ஹெலிகொப்டர்கள் ஆகியன இணைந்து மேற்கொண்ட தாக்குதலில் வேணாவில் புரத்தில் உள்ள ஆறு பொதுமக்களின் வீடுகளும், பல்லாவி துணுக்காய்ப்பகுதியில் உள்ள சுமார் 32 வீடுகள் சேதமடைந்ததுடன் துணுக்காய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கட்டடம், இரண்டு கோவில்கள் என்பன பலத்த சேதமடைந்தன. துணுக்காய்ப் பகுதியில் உள்ள 13 கடைகளும், மல்லாவியில் வைத்திய விடுதி ஒன்றும் மூவேந்தர் சங்கக்கட்டடம் என்பனபலத்த சேதமடைந்தன

### தமிழர் மீதான

மனங்களை வீழ்த்துவதற்காக எதிரி தொடுக்கும் போர் உபாயம்தான் இந்த விமானக்குண்டு வீச்சு

எமது மக்களை அவர்களது சொந்த இருப்பிடங்களிலிருந்து விரட்டிவிட்டு, பொருளாதாரச் சிக்கலை உண்டு பண்ணி, அநாதரவான ஒரு நிலையை ஏற்படுத்தி தனக்கு

### மாவீரர் தின

ஊர் வடக்கு, (மத்திய பிரிவு) செ. ரஜிதா பழைய வீதி கோப்பாய், இந்திரா சண்முகராஜா கதுமலை தெற்கு, றெஜி இராஜேஸ்வரன் அ. த. க. பாடசாலை பெரிய தம்பனை வவுனியா (மேற் பிரிவு) தி. கமலாவனி 3 ஆம் கட்டை நல்லூர் வடக்கு. தியாகராஜா தயானந்தம் பருத்தித்துறை வீதி நல்லூர் வடக்கு. அ. மங்களாதேவி மானிப்பாய் மேற்கு (தனியார் பிரிவு) முத்துக்குமாரு இராதாகிருஷ்ணன் கோண்டாவில் வீதி இருபாலை, வாசுகி ஜெகநாதன் 17, கைலாசப் பிள்ளையார் கோவில் வீதி, யாழ்ப்பாணம், அமிரன் றெஜினோல்ட் அச்சுக்கூட வீதி யாழ்ப்பாணம்.

கட்டுரை:- (கீழ்ப் பிரிவு) திருநாவுக்கரசு குமுதினி வதிரி கரவெட்டி, பா. பாக்கிய சுகந்தி கிளிநொச்சி கனகபுரம் த. க. பாடசாலை, வி அஜந்தா, வ. பார்த்தீபன் இல. 200, பிரதான வீதி சுண்டிக்குளி, கோ. சசிகலா பம்பைமடு அ. த. க. பாடசாலை வவுனியா, வல்லிபுரம் அம்பிகா பருத்தித்துறை ஒலைகந்தரோடை சுன்னாகம். (மத்திய பிரிவு) க. சிவானுஜா யாழ் இந்து மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம், சுதேசினி உலகநாதன் கரம்பகம் மிருசுவில் சி புகலைவன் யாழ் மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை, சிவஞானம் பூமகள் வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை. (மேற் பிரிவு) க. மதுமதி நெடியகாடு வல்வெட்டித்துறை, பத்மினி செல்வராஜா, யசோதா சோதிலிங்கம் ஐயனார் கோவில் வீதி சண்டிலிப்பாய், பொன்னுக்கோன் பூபிரகாஷ் ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம் (தனியார் பிரிவு) அனுமித்திரன் சங்கரபரமசாமி தென்மயிலை தெல்லிப்பளை.

முருகனடியான் 174கோவில் வீதிநல்லூர், சசிகலா தர்மலிங்கம் ஜீ பி. எஸ்வீதிகல்வியங்காடு வசந்தி நமசிவாயம் 7ஆம் ஒழுங்கை, புதுக்குளம் வவுனியா, மிதிலைச் செல்வி - கணபதிப்பிள்ளை உரும்பராய் வடக்கு. உரும்பராய்.

ஜெயசாந்தி சிவப்பிரகாசம் கச்சாய் வீதி சாவகச்சேரி, குமரகுமரன், வறணி மகாவித்தியாலயம் வறணி தேவகி, அனந்தராஜ் தணியம்பைத் தெரு வல்வெட்டித்துறை (மத்திய பிரிவு), மூ. பகிரதி தர்மபுரம் மகாவித்தியாலயம்கிளிநொச்சி சுப்பிரமணியம். குகதாஸ், இருவாளை ஒழுங்கை கோப்பாய், மரியதாஸ் அனிந்தா. மரிசலின் மரியதாஸ் 761 கடற்கரை வீதி நாவாந்துறை, இ. அனுரதன் 60 அத்தியடி புது வீதி அத்தியடி (மேற்பிரிவு), இ. ராம் யூனியன் கல்லூரி தெல்லிப்பளை, திருமகள் அமிர்தநாயகம் சன்னதி வீதி உடுப்பிட்டி ச. மதிருபன் வாசிகசாலையடி உடுப்பிட்டி. குகப்பிரியா பேராயிரம், சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை (தனியார்பிரிவு) சி கருணாகரன் பிரதானவீதி இயக்கச்சி, கலைவாணி ராஜதமாரன், மாதகல் கிழக்கு மாதகல், என். கிருஷ்ணசிங்கம் புங்கன்குளம்யாழ்ப்பாணம்.

கவிதை:- (கீழ்ப்பிரிவு) தியாகராஜா சுஜீவன்புலோப்பளை ரோடபளை தமோகனரூபி, ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் ஒட்டிசுட்டான் அ. அமுதின் இராமநாதன் வீதி நாயன் மார்க்கட்டு, (மத்திய பிரிவு) சி. கதர்சினி எம். பெ பாசாலை, பருத்தித்துறை, எஸ். பிரபாகரன், கரவெட்டி மத்தி கரவெட்டி, ரமணி ராஜரட்ணம் நொச்சிமோட்டை ஓமந்தை, (மேற்பிரிவு) தயாவினி தர்மலிங்கம், குடத்தனை மேற்கு குடத்தனை, சின்னத்தம்பி, வதனா ஆனைக்கோட்டை வேதாரணியம், தனேஸ்குமார், அச்சுவேலி வடக்குஅச்சுவேலி, (தனியார் பிரிவு) சி. குமரவேள் நாவலர் வீதியாழ்ப்பாணம், முருகனடியான், கோவில் வீதிநல்லூர், தேகுயின்சயிலா, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.

நாவல் போட்டிக்கு போதியளவு ஆக்கங்கள் வந்து சேரவில்லை ஆறு எழுத்தாளர்களே நாவல் போட்டியில் கலந்து கொண்டனர். ஆயினும் வந்து சேர்ந்த நாவல்களில் இலக்கிய தரம், மொழிவளம், அமைப்பு முதலிய அம்சங்கள் போட்டியில் பரிசு பெறும் தரத்தில் அமைந்தி

மாணவர்களுக்கு

பருத்தித்துறைக்கு அடுத்து வர இருக்கும் கப்பல் மூலம் மாணவர்களுக்கான மதிய உணவு முத்திரைகள் சுமார் இரண்டு லட்சத்து இருபத்தையாயிரம் ரூபா வரையானவை எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் பாடசாலை மாணவர்களுக்கான பாடப்புத்தகங்கள் அப்பியாசக் கொப்பிகள் போன்றவையும் இக்கப்பலில் எடுத்து வரப்படும் என அரச அதிபர் தெரிவித்தார்.

## வருடாந்த பொதுக் கூட்டம்

(உரும்பராய்)

யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் (27 01 91, ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அடைக்கல மாதா வித்தியாலயத்தில் (ஒ எல். ஆர்.) நடைபெறவுள்ளது. அன்றைய தினம் தந்தையை இழந்த பிள்ளைகளுக்கான தாபரிப்பு நிதியும் வழங்கப்படவுள்ளது. இவ்வைபவத்திற்கு 35 பிள்ளைகளுக்கு இந் நிதியை நேரடியாக வழங்குனர்கள் கையளிப்பார்கள். (32)

## ஆதாரம் காட்டிப் பெறவும்

கடந்த பொங்கலன்று விஷ்ணுகுமார் என்பவரால் சிறிய மோதிரம் ஒன்று குமார கோயில் வீதியில் அமைந்துள்ள பாடசாலைக்கு அருகாமையிலிருந்து கண்டெடுக்கப்பட்டு, ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும் (91)

மாதத்தின்பின் எமக்கு நாம் கேட்கும் அளவில் மருந்துப் பொருள்கள் அனுப்பிவைக்கப்படவில்லை. இதனால் தற்போது சில தடுப்பு மருந்துகள் உட்பட பல அத்தியாவசிய மருந்துப் பொருள்களுக்கு பற்றாக்குறை நிலவுகின்றது சில மருந்து வகைகள் முற்றாகத் தீர்ந்துவிட்டன.

இவ்வாறான நிலைமைகளைப் புரிந்து கொள்ளாமல் மருந்துப்பொருள்களின் பற்றாக்குறைபற்றி எதுவுமே தெரியாது என்று அரச அதிபர் கூறினால் நான் அதுபற்றி எதுவுமே செய்ய முடியாது என்றார்.

மேலும் கருத்து வெளியிடுகையில் மருந்துத் தட்டுப்பாடு குறித்து நான் மட்டுமல்ல யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளர், யாழ். பிரஜைகள் குழுவினர். தனியார் மருத்துவமனைகள் சங்கத்தினர், தனியார் பார்மஸிகளின் பிரதிநிதிகள் போன்றவர்களும் மருந்துப் பொருள்களின் பற்றாக்குறைபற்றியும் அவற்றை எடுத்து வருவதற்கு நடவடிக்கைகளை எடுக்கும்படியும் அரச அதிபரிடம் கேட்டிருந்தனர் என்றும் தெரிவித்தார்.

அரச அதிபர் கொழும்பில் தங்கியிருக்கும் சமயத்தில் இதுபற்றி நீங்கள் ஞாபகப்படுத்தியிருக்கலாமே என்று எமது நிருபர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் அரசாங்க அதிபரின் பின்னால் நானும் அல்லவா கொழும்புக்குச் செல்லவேண்டும் என்று கூறினார்.

எனினும் தான் தற்போது பற்றாக்குறை நிலவும் மருந்துப் பொருள்களின் தேவை பற்றியும் அவற்றை அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும் சுகாதார அமைச்சுக்கு கடிதம் ஒன்று அனுப்பிவைத்திருப்பதாகத் தெரிவித்தார். (க)

க்குண்டு வீச்சு

எமது மக்களை அவர்களது சொந்த இருப்பிடங்களிலிருந்து விரட்டிவிட்டு, பொருளாதாரச் சிக்கலை உண்டு பண்ணி, அநாதரவான ஒரு நிலையை ஏற்படுத்தி தனக்கு அருகில் அகதிமுகாம்களில் அடைத்து பின் தன் அழிப்பு வேலையை இலகுவாகச் செய்யலாம் என்பதே எதிரியின் திட்டமாகும்.

எதிரியின் இந்தச் சதியை எமது மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்

இன்று வட தமிழீழம் முழுவதும் மக்கள் கூடும் இடங்களில் விமானங்கள் குண்டுகளை வீசுகின்றன. இதன் விளைவாக வடமராட்சியிலிருந்து தென்மராட்சிக்கும் தென்மராட்சியிலிருந்து வடமராட்சிக்கும் மக்கள் இடம்பெயர்வதில் அர்த்தமில்லை.

எதிரிக்கு மிகவும் தேவையான யாழ் கோட்டை இராணுவ முகாமையோ, மாங்குளம் இராணுவ முகாமையோ அவனால் காப்பாற்றவோ தொடர்ந்து வைத்திருக்கவோ முடியவில்லை. அப்படிப்பட்ட நிலையில் வல்வெட்டித்துறையில் அவன் ஒரு நகர்வை செய்வதோ, ஒரு புதிய முகாமை அமைப்பதோ இயலாத வேலை.

இன்று எதிரி எமது மக்கள் மீது ஓர் உளவியல் யுத்தத்தை ஆரம்பித்திருக்கின்றான். இதற்கு அஞ்சி ஓடாமல் நாம் தற்காப்பு நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்

எதிரியின் குண்டு வீச்சிலிருந்து தற்காத்துக் கொள்வதற்காக ஒவ்வொரு பொதுமகனும் பதுங்குகுழிவசதியினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் அன்பான தமிழீழ மக்களே! மனவுறுதிதான் போராட்டத்தை வெற்றி கொள்ள வைக்கும்.

எதிரியின் இந்த உளவியல் யுத்தத்திற்கு அடிபணியாது எமது வீடுகளிலேயே பதுங்கு குழிகளை அமைத்து எமது இருப்பிடங்களை விட்டு அகலாது எதிரியின் நோக்கத்தை முறியடிப்போம்.

வீதிநல்லூர், சசிகலா தர்மலிங்கம் ஜீ.பி.எஸ் வீதி கல்வியங்காடு, வசந்தி நமசிவாயம் 7ஆம் ஒழுங்கை, புதுக்குளம் வவுனியா, மிதிலைச் செல்வி - கணபதிப்பிள்ளை உரும்பராய் வடக்கு, உரும்பராய்.

சிறுகதை: (கீழ்ப்பிரிவு) சனகலிங்கம் தர்மசேகரம் முகமாலை எழுதுமட்டுவாள்,

நள்ளிரவில

ச்செல்வி (வயது 13), கே. வசந்தன் (வயது 3) கே நிர்மலா (வயது 29) ஆகியோரே படுகாயமுற்றோராவர் (85)

அப்பாவிமக்களின்

கள் மூலம் யுத்தத்தை ஒருமுடிவுக்குக் கொண்டுவர முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் என சிறிலங்கா வானொலிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யுத்தத்தை உடன் நிறுத்துவதற்காக முயற்சிக்குமாறு நேற்றுக்காலை அணிசேரா இயக்கத்தலைவரான யூகோஸ்லேவாக்கிய ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பிய சிறிலங்கா ஜனாதிபதி யுத்தத்தை முடிவிற்குகொண்டுவர அணிசேரா இயக்கத் தலைவர் எடுக்கும் முயற்சிக்கு தாம் பக்கபலமாக உள்ளதாகவும், அணிசேரா இயக்கத் தலைவர் உடனடியாக அணிசேரா நாடுகள் அமைச்சர்களின் செயற்குழுவைக் கூட்ட வேண்டும் எனவும் சிறிலங்கா ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குடாநாட்டில்

பகுதியில் காலை ஆறுமுப்பது மணியளவில் இரண்டு அவ்ரோ விமானங்கள் மாறி மாறிப் பீப்பாக் குண்டுகளை வீசின. தொடர்ந்து அதே இடத்தில் காலை ஒன்பது மணியளவில் வை-12 ரக இராட்சத விமானத்தின் தாக்குதல் ஆரம்பித்தது. அங்கும் இங்கும் அலைந்து அலைந்து வீசிய குண்டுகளால் பெருமளவிலான அப்பாவிப் பொதுமக்களின் வாழ்விடங்கள் நாசமாயின, மீண்டும்

னர்களே நாவல் போட்டியில் கலந்து கொண்டனர். ஆயினும் வந்து சேர்ந்த நாவல்களில் இலக்கிய தரம், மொழிவளம், அமைப்பு முதலிய அம்சங்கள் போட்டியில் பரிசு பெறும் தரத்தில் அமைந்திராத காரணத்தினால் நாவல் போட்டிக்கு பரிசுகள் வழங்கப்படவில்லை.

வந்த அவ்ரோ விமானங்களும் ஹெலிக்கொப்டரும் வல்வெட்டித்துறைப் பகுதியை அதிர வைத்தன. ஏராளமான வீடுகள் இந்தத் தாக்குதலிலும் தரைமட்டமாயின.

நேற்று மட்டும் வல்வெட்டித்துறைக்கு ஐந்துமுறை வந்த விமானங்கள் காலையிலிருந்து மாலைவரை தொடர்ந்து தாக்கியவண்ணம் இருந்தன.

இந்தத் தாக்குதல்கள் நடைபெற்ற அதேநேரம் வலிகாமம் வடக்கு, மாவிட்டபுரம் பகுதியில் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் மாறி மாறிக் குண்டுகளை வீசின.

குப்பிளான் பகுதியிலும் அவ்ரோ விமானம் ஒன்று நேற்று ஆறு பீப்பாக் குண்டுகளை வீசியது.

மாலை நான்கு முப்பது மணியளவில் கொக்குவில் இந்துக்கல்லூரி கொக்குவில்சந்தி பகுதிகளில் அவ்ரோவிமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன. பத்துக்கும் அதிகமான வீடுகள் நாசமாயின. எஸ். மகாதேவா என்ற ஓய்வுபெற்ற ஆசிரியர் படுகாயமுற்று பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

மேலும் உமாகாந்தையா (25) இ.சண்முகநாதன் (46 திருப்பதி மகாலிங்கம், (42) தம்பையா கண்ணன், (21) ஆறுமுகம் ஜெகராஜேசன், (42) செல்வராசா, (45) சி. சிவசுப்பிரமணியம் ஆகியோர் காயமடைந்தனர்.

இந்த தாக்குதல்கள் முடிந்தும்கூட ஹெலிக்கொப்ரர்களும் சீப்பிளேன்களும் மாலை வரை சுழன்றுபறந்து வட்டமிட்டவண்ணம் இருந்தன. (லோ, 85, ச)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.